## April 23, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு வியாழக்கிழமை (ஏப். 23) காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறுகிறது. இதையொட்டி தமிழகம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(i) தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 5.73 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். இதில், 14 லட்சம் பேர் முதல்முறை வாக்காளர்கள், 3.98 லட்சம் பேர் 85 வயதைக் கடந்தவர்கள். மாநிலம் முழுவதும் 75,064 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

2. பாகிஸ்தானில் நடைபெறவுள்ள அடுத்தகட்ட அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஏதுவாக, ஈரானுடனான போர் நிறுத்தம் காலவரையின்றி நீட்டிக்கப்படு வதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார்.

(i) ஈரானுக்கு எதிரான போரை இரு வாரம் நிறுத்துவதாக அமெரிக்கா கடந்த 8-ஆம் தேதி அறிவித்திருந்தது. அந்த இருவார போர் நிறுத்தம் புதன்கிழமையுடன் நிறைவடைய இருந்தது.

3. பிரிட்டனில் வருங்கால தலைமுறையினர் புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கு உள்ளாவதைத் தடுக்கும் வகையில், 2009 முதல் பிறந்தவர்களுக்கு சிகரெட் விற்பனைக்கு வாழ்நாள் தடைவிதிக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க மசோதா அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

(i) தற்போது 18 வயது என்பது குறைந்தபட்ச வரம்பாக உள்ள நிலையில், இனி ஒவ்வொரு ஆண்டும் இந்த வயது வரம்பு உயர்த்தப்படும். இதன் விளைவாக, இன்றைய சிறுவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் சிகரெட் வாங்குவதற்கான சட்டபூர்வ உரிமையை ஒருபோதும் பெற முடியாது.

(ii) அரசர் சார்லஸின் ஒப்புதலுக்குப் பிறகு நடைமுறைக்கு வரவுள்ள இச்சட்டம், வெறும் சிகரெட் மட்டுமின்றி புகையிலை சார்ந்த இதர பொருள்கள் மற்றும் இ-சிகரெட்டுகளையும் கட்டுப்படுத்த அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.

(iii) இளைஞர்களைக் கவரும் வகையில் புகையிலைப் பொருள்களில் சேர்க்கப்படும் சுவையூட்டிகள் மற்றும் கவர்ச்சிகரமான பேக்கிங் முறைகளை முறைப்படுத்தவும் இதில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(iv) மரணமில்லா சமுதாயம் இலக்கு!

- பிரிட்டனில் புகைப்பிடித்தலால் ஆண்டுதோறும் சுமார் 80,000 உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. தடுக்கக் கூடிய மரணங்கள் மற்றும் உடல்நலக் குறைபாடுகளுக்கு இதுவே முதன்மைக் காரணமாக உள்ளதாக அந்நாட்டு சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.
- 'பிரிட்டன் குழந்தைகள் இனி வாழ்நாள் முழுவதும் புகையிலை பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டு, முதல் புகையில்லா தலைமுறையாக வளர்வார்கள்' என சுகாதார அமைச்சர் வெஸ் ஸ்டீரிடிங் பெருமிதம் தெரிவித்தார்.

(v) உலக நாடுகளுக்கு முன்னோடி:

- கடந்த 1970-களுடன் ஒப்பிடுகையில் பிரிட்டனில் புகைப்பிடிப்போரின் எண்ணிக்கை

மூன்றில் 2 பங்கு குறைந்துள்ள போதிலும், இன்னும் 13 சதவீத மக்கள் இப்பழக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

- முன்னதாக, நியூஸிலாந்து இத்தகைய சட்டத்தைக் கொண்டு வந்து பின் கைவிட்ட நிலையில், தற்போது பிரிட்டன் மேற்கொண்டுள்ள இத்துணிச்சலான நடவடிக்கை, புகையிலை ஒழிப்பில் உலக நாடுகளுக்கு ஒரு முன்னுதாரணமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4. தென் அமெரிக்க நாடான பெருவில் கடந்த 12-ஆம் தேதி நடைபெற்ற பொதுத்தேர்தலின் வாக்கு எண்ணிக்கை முடிவுகள் வெளியாவதில் பெரும் தாமதம் ஏற்பட்டுள்ள நிலையில், அந்நாட்டின் தேர்தல் ஆணையத் ஆணை தலைவர் பியரோ கார்வெட்டோ பதவி விலகியுள்ளார்.

(i) அவர் தனது ராஜிநாமா கடிதத்தில், 'தேர்தல் நடைமுறைகளில் சில குறைபாடுகள் இருந்தன. இருப்பினும், வாக்குப்பதிவில் எவ்வித முறைகேடுகளும் நடைபெற வில்லை.

(ii) ஜூன் 7 நடைபெறவுள்ள அதிபர் தேர்தலுக்கான 2-ஆம் கட்ட வாக்குப்பதிவை நம்பகத்தன்மையுடன் நடத்தவும், தற்போதைய அரசியல் சூழலில் நிலவும் குழப்பங்களுக்குத் தீர்வு காணவும் எனது பதவி விலகல் அவசியமானது. நிலுவையில் உள்ள தேர்தல் புகார்களைப் பாரபட்சமின்றி விசாரிக்க வேண்டும்' என வலியுறுத்தினார்.

(iii) வாக்கு எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள இந்த அசாதாரண கால தாமதம் காரணமாக, தேர்தலில் போட்டியிட்ட பல்வேறு வேட்பாளர்ளர்கள் முறைகேடு புகார்களை எழுப்பியுள்ளனர்.

(iv) சுமார் 94 சதவீத வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில், பழமைவாதக் கட்சியின் முன்னிலை வேட்பாளரான கெய்கோ ஃபுஜிமோரி 17 சதவீத வாக்குகளுடன் முதலிடத்தில் உள்ளார். இவரை எதிர்த்து ஜூன் மாதத் தேர்தலில் களம் காணப்போகும் 2- ஆவது வேட்பாளர் யார் என்பதில் இன்னும் தெளிவற்ற நிலையே நீடிக்கிறது. மே 15-ஆம் தேதிக்குள் முழுமையான முடிவுகள் அறிவிக்கப்படும் என்று அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

5. இணைய விளையாட்டு ஊக்குவிப்பு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம் மே 1-ஆம் தேதி முதல் அமலாவதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் தெரிவித்தது. இதற்கான விதிகளை அமைச்சகம் வெளியிட்டது. இதுதொடர்பாக தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலர் எஸ்.கிருஷ்ணன் கூறியதாவது:

(i) ஏற்கெனவே தடை விதிக்கப்பட்ட இணையவழி சூதாட்ட விளையாட்டுகள் தவிர பிற இணைய விளையாட்டுகளை கட்டாயம் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இந்த விளையாட்டுகளை விருப்பத்தின் அடிப்படையில் மட்டும் பதிவுசெய்யும் விதமாக விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

(ii) ஒரு விளையாட்டை இணைய சூதாட்ட விளையாட்டு அல்லது இணைய சமூக விளையாட்டு என விண்ணப்பிக்க நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை.

(iii) பயனர் அம்சங்கள் குறித்து விதிகளில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இணைய சூதாட்ட விளையாட்டுகளுக்கு இந்தச் சட்டம் தடை விதிக்கும் அதேவேளையில் மின்னணு விளையாட்டுகள் மற்றும் இணைய சமூக விளையாட்டுகளை ஊக்குவிக்கிறது என்றார்.

(iv) கடந்த 2025-ஆம் ஆண்டு அக்டோபரில் இந்தச் சட்டத்தின் மீது மத்திய மின்னணு அமைச்சகம் கருத்து கேட்ட நிலையில் தற்போது இணைய விளையாட்டு ஊக்குவிப்பு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டத்துக்கான விதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை மே 1-ஆம்

தேதி முதல் அமலாகின்றன.

6. மணிப்பூரில் பெரும்பாலான மாவட்டங்களில் முழு அடைப்பு போராட்டம் நீடிப்பதால், மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.

(i) வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் மைதேயி சமூகத்தினர் மற்றும் குகி பழங்குடியினர் இடையிலான மோதல்போக்கு நீடிக்கும் நிலையில், இருசமூகத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளும் தாக்குதலில் ஈடுபடுவது தொடர்கதையாக உள்ளது.

(ii) மைதேயி சமூகத்தினர் அதிகம் வாழும் விஷ்ணுபூரில் கடந்த ஏப்.7-ஆம் தேதி ஒருவீட்டின் மீது குகி தீவிரவாதிகள் நடத்திய குண்டுவீச்சில் 2 குழந்தைகள் உயிரிழந்தனர்.

(iii) இந்தச் சம்பவத்தைக் கண்டித்து, மைதேயி சமூகத்தினர் பெரும்பான்மையாக உள்ள ஐந்து பள்ளத்தாக்கு மாவட்டங்களில் 4-ஆவது நாளாக முழு அடைப்பு போராட்டம் தொட்ழதது.

(iv) மணிப்பூரில் கடந்த 2023-இல் கலவரம் தொடங்கியதில் இருந்து 58,821 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்; இவர்களுக்காக 173 அரசு முகாம்கள் செயல்பட்டு வருகின்றன என்று மாநில உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

7.April 21 - தேசிய குடிமைப் பணிகள் தினம்

8. பஹல்காம் பயங்கரவாத தாக்குதலின் முதலாம் ஆண்டு நினைவு தினம் புதன்கிழமை (ஏப்.22) அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள் துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

(i) 'அனைத்து வடிவிலான பயங்கரவாதத்தையும் வீழ்த்த இந்தியா உறுதியுடன் உள்ளது' என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.

(ii) 'மினி ஸ்விட்சர்லாந்து' என்று வர்ணிக்கப்படும் பிரபல சுற்றுலாத் தலமான பஹல்காம், ஜம்மு- காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு கடந்த 2025, ஏப். 22-ஆம் தேதி லஷ்கர்-ஏ-தொய்பா பயங்கரவாதிகள் 3 பேர் நடத்திய கொடூரமான துப்பாக்கிச்சூட்டில் 25 சுற்றுலாப் பயணிகள் மற்றும் குதிரை சவாரி தொழிலாளி ஒருவர் என 26 பேர் உயிரிழந்தனர்.

(iii) இந்தத் தாக்குதலுக்குப் பழி தீர்க்க, கடந்த மே 7-ஆம் தேதி 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் அதிதுல்லிய தாக்குதல் நடத்தி, பயங்கரவாத உள்கட்டமைப்புகளைத் தகர்த்தது இந்திய ராணுவம். இதைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே மூண்ட ராணுவ மோதல், பாகிஸ்தான் விடுத்த கோரிக்கையின் பேரில் 4 நாள்களில் முடிவுக்கு வந்தது.

(iv) பஹல்காம் தாக்குதலின் முதலாம் ஆண்டு நினைவு தினம் புதன்கிழமை அனுசரிக்கப்பட்டது. ஜம்மு-காஷ்மீர் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

9. உலக புத்தக தினத்தின் வரலாறு மற்றும் இலக்கியத்தின் நீடித்த தாக்கம்.

(i) உலக புத்தக தினத்தின் வரலாறு

- உலக புத்தக தினம் ஆண்டுதோறும் ஏப்ரல் 23 அன்று கொண்டாடப்படுகிறது. ஆகஸ்ட் 25 முதல் நவம்பர் 16, 1995 வரை பாரிஸில் நடைபெற்ற யுனெஸ்கோவின்

(UNESCO) 28-வது மாநாட்டின் போது இது அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்டது.

- ஏப்ரல் 23 ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டதற்குக் காரணம், 1616 ஆம் ஆண்டில் உலகப் புகழ்பெற்ற மூன்று எழுத்தாளர்களான மிகுவல் டி செர்வாண்டஸ் (Miguel de Cervantes), வில்லியம் ஷேக்ஸ்பியர் (William Shakespeare) மற்றும் இன்கா கார்சிலாசோ டி லா வேகா (Inca Garcilaso de la Vega) ஆகியோரின் நினைவு தினம் இந்நாளில் அமைந்ததே ஆகும்.
- புத்தகங்களைக் கொண்டாடுவதற்கான ஒரு தினத்தை உருவாக்கும் சிந்தனை முதன்முதலில் ஸ்பெயின் நாட்டில் தோன்றியது; அங்கு இந்நாளில் ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் புத்தகங்களையும் ரோஜாக்களையும் பரிமாறிக்கொள்ளும் ஒரு மரபு உள்ளது.
- தற்போது இந்நாள் 100-க்கும் மேற்பட்ட நாடுகளில் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்நாளில் பிறந்த அல்லது மறைந்த மாரிஸ் ட்ரூன் (Maurice Druon) மற்றும் விளாடிமிர் நபோகோவ் (Vladimir Nabokov) போன்ற பிற எழுத்தாளர்களையும் இந்நாள் கௌரவிக்கிறது.
- சர்வதேச குழந்தைகளுக்கான புத்தக தினம் (International Children's Book Day), புகழ்பெற்ற குழந்தைகளுக்கான எழுத்தாளரான ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சனின் பிறந்தநாளான ஏப்ரல் 2 அன்று, 1967 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.

(ii) புத்தகங்களின் முக்கியத்துவமும் பயன்களும்

- புத்தகங்கள் புதிய உலகங்களுக்கான நுழைவாயிலாகவும், அறிவின் கருவூலங்களாகவும், மனித கற்பனையின் உச்சமாகவும் சிறப்பிக்கப்படுகின்றன.
- இவை நிகழ்காலத் தலைமுறையை கடந்தகாலத்தின் ஞானத்துடன் இணைக்கும் ஒரு பாலமாகச் செயல்படுவதுடன், எதிர்காலம் குறித்த நுண்ணறிவுகளையும் வழங்குகின்றன.
- புத்தகங்களை வாசிப்பது சொல்லாற்றலை (vocabulary) வளர்க்கிறது, சிந்தனைத் திறனை மேம்படுத்துகிறது, மேலும் தனிநபர்கள் பயணம் செய்யாமலேயே பல்வேறு கலாச்சாரங்களையும் நாகரிகங்களையும் அனுபவிப்பதற்கு வழிவகுக்கிறது.
- புத்தகங்கள் நமது கலாச்சாரத்திற்கு அடிப்படையானவை; அவை புரிதலையும், சகிப்புத்தன்மையையும், தலைமுறைகள் தாண்டி அறிவு பரவுவதையும் ஊக்குவிக்கின்றன.

(iii) எழுத்தாளர்கள் மற்றும் இலக்கியம் குறித்த வரலாற்று உண்மைகள்

- வில்லியம் ஷேக்ஸ்பியர்:
- அன்பு, பேராசை, பொறாமை மற்றும் துயரம் போன்ற மனித உணர்வுகளின் ஆழங்களை ஆராயும் வகையில் இவர் 37 நாடகங்களை எழுதினார்.
- இவரது கல்விப்புலம் "சிறிதளவு லத்தீன் மற்றும் அதற்கும் குறைவான கிரேக்கம்" என்ற அளவிலேயே அமைந்திருந்தாலும், இவரது படைப்புகள் ஆங்கில மொழிக்குத் தூண்களாகத் திகழ்கின்றன.
- தமிழ் சூழலைப் பொறுத்தவரை, இவரது 37 நாடகங்களில் 34 நாடகங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- 'தமிழ் நாடக உலகின் தந்தை' என்று போற்றப்படும் பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள், ஷேக்ஸ்பியரின் படைப்புகளான 'ஹாம்லெட்' (அமலதித்யன்), 'மேக்பத்' (மகபதி) மற்றும் 'ஒதெல்லோ' போன்றவற்றைத் தமிழுக்கு ஏற்றவாறு தழுவி அமைத்தார். * சுவாமி விபுலானந்தர், ஷேக்ஸ்பியரின் நாடகங்களை தமிழ் இலக்கிய இலக்கணத்துடன் ஒப்பிட்டு, 'மதங்க சூளாமணி' எனும் ஆய்வு நூலை இயற்றினார்.
- மிகுவல் டி செர்வாண்டஸ்:
- 'டான் குயிக்சோட்' (Don Quixote) எனும் செவ்வியல் தலைசிறந்த படைப்பிற்காகப் புகழ்பெற்ற ஒரு ஸ்பானிய எழுத்தாளர்.
- இன்கா கார்சிலாசோ டி லா வேகா: அமெரிக்கக் கண்டத்தின் இலக்கிய

முன்னோடியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு பெருவிய எழுத்தாளரும் வரலாற்றாசிரியரும் ஆவார்.

(iv) அறிஞர்கள் மற்றும் சிந்தனையாளர்களின் கருத்துக்கள்

வாசிப்புப் பழக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி:

- சாக்ரடீஸ்: "உன் நண்பன் யார் என்று சொல்; நீ யார் என்று நான் சொல்கிறேன்."
- ஜேம்ஸ் ஆலன்: இக்கூற்றை மாற்றியமைத்து, "நீ வாசிக்கும் புத்தகங்கள் எவை என்று சொல்; நீ யார் என்று நான் சொல்கிறேன்," என்று கூறினார்.
- ஐசக் நியூட்டன்: "ஒரு புத்தகம் என்பது நூறு நண்பர்களுக்குச் சமமானது," என்று குறிப்பிட்டார்.
- ஜான் மில்டன்: ஒரு புத்தகத்தை அடுத்த தலைமுறைக்காகப் பாதுகாத்து வைப்பவரை, "மனிதகுலத்தின் உண்மையான விடிவெள்ளி" என்று வர்ணித்தார்.
- மகாத்மா காந்தி: தமக்கு ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்கப்பட்டபோது, "நான் ஒரு நூலகத்தைக் கட்டுவேன்," என்று பதிலளித்தார்; இதன் மூலம், சமூக மேம்பாட்டிற்கான மிகச்சிறந்த முதலீடு நூலகங்களே என்பதை அவர் வலியுறுத்திக் காட்டினார்